Annexure 14 F
SCAA DT. 29-2-2008

# தமிழ்ப் புலவர் ஆசிரியப் பயிற்சிப் பட்டயப் படிப்பு
## கல்வியாண்டு 2008-09-ல் சேருவோருக்குரியது
## தொலைதூரக்கல்வி முறை

பாடத்திட்ட விபரம் (Scheme of Examinations)

| | | |
|---|---|---|
| தாள் 1 | தமிழ் கற்பிற்க்கும் முறை | 100 மதிப்பெண்கள் |
| தாள் 2 | கல்வி உளவியலும் பள்ளி ஆட்சி முறையும் | 100 மதிப்பெண்கள் |
| தாள் 3 | கல்வியும் செய்தி மற்றும் தகவல் தொழில் நுட்பம் | 100 மதிப்பெண்கள் |
| தாள் 4 | செய்முறைப் பயிற்சி | 100 மதிப்பெண்கள் |
| | மொத்தம் | 400 மதிப்பெண்கள் |

-1-

'TAMIL PUNDIT TEACHER ... CHENNAI

# தாள் - I தமிழ் கற்பிக்கும் முறை

## பகுதி-I

**அலகு 1 : தமிழ் கற்பிக்கும் முறை**

1. கல்வித் திட்டத்தில் (Curriculum) தாய்மொழியின் இடம் - நோக்கங்கள் - பயன்கள் - சமூகப் பண்பாட்டு மரபினையறியும் கருவி மொழியாகும் - பிற மொழி கற்பித்தலின் நோக்கங்கள் - வேறுபாடுகள்.

2. (1) மொழிப்பாடம் ஒரு திறன்பாடம் - நான்கு அடிப்படைத் திறன்கள் - கேட்டல் - படித்தல் - பேசுதல் - எழுதுதல் - மொழியும் சிந்தனையும்.

   (2) பேச்சாற்றல் - மேடைப்பேச்சு - செய்திகளைக் கூறுதல் - மகிழ்வித்தல் - இணங்கவைத்தல் - முன்ஆயத்தமின்றிப் பேசுதல்..

**அலகு 2 : கற்பிக்கும் பல நிலைகளில் மேற்கொள்ளவேண்டிய சிறப்பு நோக்கங்கள்.**

1. **தொடக்கநிலை** - வரிவடிவம் - ஒலிப்பு முறை - சிறிய சொற்களஞ்சியம் போன்றவை.

   **இடைநிலை** - சொற்களஞ்சியப் பெருக்கம் - தொடர் அமைப்புப் போன்றவை.

   **உயர்நிலை** - நடைச்சிறப்பு - இலக்கிய, இலக்கணத் திறன் போன்றவை.

2. தமிழ் கற்பிக்கப் பயிற்சி பெற்ற திறமை மிகுந்த ஆசிரியர்களின் தேவை - தமிழாசிரியர் பெற்றிருக்க வேண்டிய சிறப்பியல்புகள்.

3. அறிவியல் - தொழில்நுட்பச் சொற்களைத் தாய்மொழியில் படைத்துப் பயன்படுத்துதல் - அடிப்படைக் கொள்கைகள்.

**அலகு 3 : கற்பித்தல் முறைகள்**

1. பழைய முறைகள் - நிறை/குறைகள் - புதிய முறைகள் - தாய்மொழிப் பாடத்துக்கு ஏற்றவை - விளையாட்டுமுறை - நடிப்புமுறை - செயல்திட்டமுறை - மேற்பார்வைப்படிப்புமுறை போன்றவை.

2. (1) வாய்மொழிப் பயிற்சி - அதன் இன்றியமையாமை - ஒவ்வொரு நிலைக்கும் ஏற்ற பயிற்சி முறைகள்.

   (2) மொழியில் ஒலிப்பதற்கரிய ஒலிகள் - அவற்றினைச் சரியாக ஒலிக்கப்பயிற்சி அளித்தல்.

   (3) சொற்களஞ்சியம் -சொல்வளம் பெருக்கும் முறைகள்.

3. படித்தல்

   (1) படிக்கக் கற்பித்தலின் நோக்கங்கள் - படிக்கக் கற்பிக்கும் முறைகள் - எழுத்துமுறை - சொல்முறை - சொற்றொடர்முறை - (கதைமுறை) - நிறைகுறைகள்

   (2) படித்தலின் வகைகள் - படித்தல் திறன் வளர்க்கும் படிப்பு - பொழுது போக்குப்படிப்பு (மகிழ்ச்சிக்காகப்படித்தல்) - செய்தித்திரட்டுப் படிப்பு - திறனாய்வுப்படிப்பு - ஆழ்ந்த படிப்பு

   (3) வாய்விட்டுப் படித்தலும் - வாய்க்குட் படித்தலும் - நிறை குறைகள்.

4. எழுதுதல்

   (1) எழுதக்கற்பிக்கும் முன்னர் அதற்குரிய பருவம் வந்ததா என அறிதல் - பயிற்சிகள் - நல்ல கையெழுத்தின் தகுதிகள்.

   (2) எழுத்துக் கூட்டல் - தமிழ் மொழிக்குத்தேவையா? - எழுத்துப் பிழைகள் - திருத்தும் விதம்.

   (3) வரியொற்றி எழுதுதல் (Copy writing) பார்த்து எழுதுதல் (Transcription) - சொல்வதை எழுதுதல் (Dictation)- தேவை - பயன்படுத்தும் விதம்.

5. பாடநூல்கள் - சிறந்த பாடநூலின் நல்லியல்புகள் - தொடக்கநிலை - இடைநிலை - உயர்நிலைக்கேற்றவை.

**அலகு 4 : கற்பித்தல்**

1. செய்யுள் கற்பித்தல்

(1) நோக்கங்கள் - உரை நடைக்கும் செய்யுளுக்கும் உள்ள வேறுபாடுகள் - கற்பிக்கும் முறை.

(2) நீதி இலக்கியம் - தொடர்நிலைச்செய்யுள் - தனிப்பாடல்கள் - வருணனைப்பகுதிகள் - கற்பனைநயம் பொருந்தியவை போன்ற ஒவ்வொன்றையும் கற்பிக்க ஏற்ற முறை.

(3) செய்யுள் நலம் - பாராட்டிச்சுவையுணரும் திறன் வளர்த்தல்.

(4) மனப்பாடம் செய்தல் - அடிப்படைக் கொள்கைகள்.

(5) செய்யுட்பாடத்தில் இசை பெறும் இடம்.

2. உரைநடை கற்பித்தல்

(1) நோக்கங்கள் - கற்பிக்கும் முறை - வகுப்பு நிலைக்கு ஏற்ற முறை.

(2) கதைகள் - பயணக் கட்டுரை - இலக்கிய அறிமுகப் பாடம் - செய்திக்கட்டுரை - அறிவியல் தொடர்பான பாடங்கள் போன்ற ஒவ்வொன்றையும் கற்பிக்க ஏற்றமுறை.

(3) உரையாடல் - நாடக அமைப்பில் உள்ள பாடங்களைக் கற்பிக்கும் முறை.

(4) இணைத்துக்கற்பித்தல் - பிற பாடங்களுடனும் மொழிப் பாடத்தின் பிற பகுதிகளுடனும் இணைத்தல்.

3. இலக்கணம் கற்பித்தல்

(1) நோக்கங்கள் - முறைகள் - விதிவருமுறை - விதிவிளக்கமுறை

(2) இலக்கணம் கற்பித்தலில் முந்தையக்காலக் கொள்கை - இக்காலக் கொள்கை - நடைமுறை இலக்கணம்

(3) தொடக்கநிலையில் மொழிப்பயிற்சிக்கு இடமளித்தல் - முறையான இலக்கணம் தொடங்கும் நிலை

(4) எழுத்திலக்கணம் - சொல்லிலக்கணம் - பொருளிலக்கணம் - யாப்பிலக்கணம் - அணியிலக்கணம் - இவற்றைக் கற்பித்தல் முறை

(5) உறுப்பிலக்கணம் - புணர்ச்சியிலக்கணம் - தொடரிலக்கணம் - இலக்கணக் குறிப்பு - போன்றவற்றைக் கற்பிக்கும் முறை.

4. கட்டுரை எழுதக் கற்பித்தல்

(1) நோக்கங்கள் - முறைகள் - படிப்படியான வளர்ச்சியளித்தல்

(2) வாய்மொழி கட்டுரை - பயன் - எழுதும் கட்டுரைக்கு முன் அமைதல்

(3) பல்வகைக்கட்டுரைகள் - கதை - வரலாறு - வருணனை - கருத்தியல் போன்றவை

(4) செய்யுள் நலம் பாராட்டல், கட்டுரை, சுருக்கி எழுதுதல் போன்றவை

(5) குறிப்பிட்ட நோக்கத்துடன் எழுதுதலும் [Purposive Writing] புதியன படைத்தலும் [Creative Writing] வேறுபாடு - திறன் வளர்க்கும் முறைகள்.

(6) தொடரமைப்பு - பத்தியமைப்பு - நிறுத்தற் குறிகள்

(7) பிழைகள் - பிழைகளைத்திருத்துதல் - குறியீடுகள் பயன்படுத்துதல்.

5. துணைப்பாடம் கற்பித்தல்

(1) நோக்கங்கள் - முறைகள்

(2) ஆசிரியர் முன் தயாரிப்பின் தேவை - வாய்க்குட் படித்தல் திறன் வளர்த்தல் - சுருக்கி எழுதுதல்

(3) ஆழ்ந்த படிப்புக்கான நூலைக் கற்பிப்பதனின்றும் வேறுபடுதல்.

**அலகு 5 : தேர்வு**

1. தேர்வு

(1) தேர்வு - பழையமுறைத் தேர்வு (கட்டுரை) - புதியமுறைத் தேர்வு - வகைகள் - நிறைகுறைகள்

(2) வினாத்தாள் குறித்தல் – சிறந்த வினா_ தாளின் நல்லியல்புகள்

(3) திருத்தலும் மதிப்பீடும்.

2. பிற திறன்கள்

(1) கதை – பயன் – கூறும்விதம்

(2) வினாக்கள் – வினாவும் திறன்

(3) செய்தி திரட்டல் திறன் – பாடநூல் அல்லா த நூல்கள் – அகரமுதலி – கலைக்களஞ்சியம் – செய்தித் தொகுப்புகள் – நூலகம் – இவற்றைப் பயன்படுத்துட முறை.

3. மொழிப்பாடங்கற்பித்தலில் துணைக்கருவிக...

(1) தொடக்கப்பள்ளிகட்குரியவை – இடை நிலை உயர்நிலைப்பள்ளி கட்கான விளக்கத்தாட்கள் [Charts] – பிற துணைக்கருவி

(2) ஒலிப்பதிவு நாடா – படக்காட்சி – வானொலி – செய்தித்தாள்கள் – வானொலிப்பாடங்கள் – ஏற்பாடு செய்யும்முறை.

4. மொழிப்பாடங்கள் கற்பித்தலில் முன்னேற்ற மொழிப்பாடக்கருவி அறை [Language Laboratory] – திட்டமிட்டு தானே கற்றல் [Programmed Instruction] – கற்பிக்கும் கருவிகள் [Teaching Machiness] – இவை எந்த அளவு மொழிப்பாடத்திற்கு உதவும்?

## பகுதி - 2

## பாடப்பொருட் பகுதி

1. உயர்நிலைப்பள்ளிகட்கான இலக்கணப் பகுதிகளில் நிறைந்த அறிவு பெறுதல் – நடைமுறை இலக்கண அறிவு – பல்வகைத்தொடர்கள் – தொகைநிலைத்தொடர்கள் – பத்திபமைப்பு – நிறுத்தற்குறிகள் போன்றவை.

2. தற்கால இலக்கிய வளர்ச்சி. (கவிதை – சிறுகதை – புதினம் – குழந்தை இலக்கியம் – பயண இலக்கியம் போன்றவை)

3. உரைநடை வளர்ச்சி – ஆசிரியர் வரலாற்றுக்குறிப்பும் தமிழ்த்தொண்டும்.

4. தமிழ் இலக்கிய வரலாறு (பொதுவாக)

## பகுதி - 3

## செய்முறைத் திட்டம்

**1. தமிழ்க் கற்பித்தல் முறை பற்றியவை**

1. இலக்கண விளக்கத்தாள்களைத் தயாரித்தலும் பயன்படுத்தலும் – புணர்ச்சி – பெயர்வினை வகை போன்றவை.

2. இலக்கிய நூல்களை விளக்கும் விளக்கத்தாள்கள் எழுதுதல் – பயன்படுத்துதல்.

3. சொற்பிறப்பியல், சொற்களஞ்சியம், சொல்லமைப்பு பற்றியும், பாட நூலின் பண்புகள் பற்றியும் விளக்கத்தாள்கள் தயாரித்தல்.

4. குறிப்பிட்ட செய்யுட்பகுதிகளைத் தேர்ந்தெடுத்து அவற்றிலுள்ள எதுகை, மோனை, சொல்லாட்சிச்சிறப்பு ஆகியவை பற்றிய நயம் பாராட்டல் கட்டுரைகளைத்தயாரித்தல்.

5. உயர்நிலைப்பள்ளிப்பாடத்திட்டத்தில் கொடுக்கப்பட்ட கட்டுரைத்தலைப்புகளில் கட்டுரைகளைத் தயாரித்தல்.

6. நிறுத்தற்குறிகள், சொற்றொடர் மாற்றம் போன்ற மொழிப்பயிற்சிகளைத் தயாரித்தல்.

7. இலக்கியத்திறனாய்வு பற்றியறிந்து நூல் மதிப்புரை எழுதுதல்.

8. படத்தொகுப்பேடு தயாரித்தல் (மொழி கற்பித்தலுக்கு உதவும் வகையில் அமைதல்)

**2. பள்ளி ஆட்சிமுறை பற்றியவை**

கற்பித்தற்பயிற்சிக்காகச் செல்லும் பள்ளியைப் பற்றிய விவரங்களைத் திரட்டிக் குறிப்பேட்டில் எழுதுதல்.

## பார்வைக்குரிய நூற்பட்டியல்

### தமிழ்க் கற்பிக்கும் முறை

1. Suggestions for the teaching of Mother-tongue-Rybura.
2. Teaching of the Mother-tongue-Ballard.
3. தமிழ்க் கற்பிக்கும் முறைகள் – புலவர் சரவண ஆறுமுக முதலியார்.
4. தமிழ்ப் பயிற்றுமுறை – ந. சுப்புரெட்டியார்.
5. கற்பித்தல் பொதுமுறைகள் – வி. கணபதி.
6. ஐவகைப்பாடங்களும் கற்பித்தலும் – வி. கணபதி

### பாடப் பொருட் பகுதி

1. தமிழில் சிறு கதையின் தோற்றமும் வளர்ச்சியும் – கார்த்திகேசு – சிவதம்பி, எம்.ஏ., பாரிநிலையம்.
2. இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம் – மா.இராமலிங்கம்.
3. புனைகதை வளம் – மா. இராமலிங்கம்.
4. வளரும் தமிழ் – சோம. லெ
5. தமிழ் இலக்கிய வரலாறு – டாக்டர் சி.பாலசுப்பிரமணியன்.
6. தமிழ் இலக்கிய வரலாறு – டாக்டர் சி. இலா.
7. நாடகக் கலை – அவ்வை தி.க.சண்முகம்.
8. இலக்கியத்திறன் – டாக்டர் மு.வ.
9. இலக்கியக் கலை – அ.ச. ஞானசம்பந்தம்.

தாள் - 2

# கல்வி உளவியலும் பள்ளி ஆட்சிமுறையும்

## கல்வி உளவியல்

**அலகு 1 : கல்வி உளவியல்**

1. முன்னுரை - உளவியல் கல்வியும் - ஆசிரியர்க்கு உளவியல் அறிவால் ஏற்படும் நன்மைகள்.

2. மனித வளர்ச்சி - நடத்தைகளின் அடிப்படைக் காரணிகள்

   (அ) மரபு நிலையும் - சூழ்நிலையும்.

   (ஆ) கல்வியில் மனவெழுச்சியின் பங்கு.

3. வளர்ச்சிப்பருவங்கள் - மனித வளர்ச்சியின் பொதுக்கோட்பாடுகள் - உடலியல் - உளவியல் குணநலன்கள் - பிள்ளைப் பருவத்திலும் இளமைப் பருவத்திலும் வளர்ச்சிக்குரிய செயல்கள்.

4. புலன்காட்சியும் உற்று நோக்கலும் - பொதுமைக் கருத்து சார்ந்த சிந்தனை - கற்பனை - ஆய்வுத்திறன் - ஆக்கத்திறன்.

**அலகு 2 : கற்றலின் இயல்பு**

1. (அ) திறம்படக் கற்றலுக்கு இன்றியமையாத காரணிகள் - கவனம் - ஊக்குவித்தல் - ஊக்குவித்தலில் இயல்பூக்கங்கள் - விளையாட்டு ஆர்வம் - செய்து கற்றல் - பயிற்சி மாற்றமும் தற்காலக் கல்வி முறையும்.

   (ஆ) நினைவு - சிறந்த முறையில் மனத்திருத்தலுக்கான நிலைகள் - மறத்தல் - அதற்கான காரணங்கள் - அவற்றை நீக்கும் முறைகள்.

2. (அ) மாணாக்கரிடையே தனியாள் வேற்றுமைகள் - பொது நுண்ணறிவும் அளவீடும்.

   (ஆ) மீத்திறக் குழந்தைகள் - பிற்பட்ட குழந்தைகள்.

   (இ) பொருத்தப்பாடற்ற குழந்தைகள் - இயக்கக் குறைபாடுடையவர்.

**அலகு 3 : ஒழுக்க வளர்ச்சியும் ஆளுமை வளர்ச்சியும்**

1. (அ) ஒழுக்க வளர்ச்சியில் பற்றுகளின் பங்கு.

   (ஆ) ஒருமைப்பாடுடைய ஆளுமையின் குணநலன்கள்

   (இ) சிக்கல் நடத்தையும் நெறி பிறழ்வும் - உளநலனியல் கோட்பாடுகள் ஆசிரியர் மாணாக்கருடைய உளநலம்.

2. குழு நடத்தை - பரிவு - கருத்தேற்றம் - பார்த்துச் செய்தல் - கல்வியும் சமூகமும் - வளரும் குழந்தையின் மீது சமூகத்தாக்கம் - வீடு - விளையாட்டுக்குழு - சமூகப் பிரிவு (வகுப்பு), சமயம், படக்காட்சி போன்றவற்றின் செல்வாக்கு - மக்களாட்சி தலைமைக்கான பயிற்சி - மனஉணர்ச்சி வேறுபாடுகளையும் (இறுக்கம்) சமூகப் போராட்டங்களையும் நீக்கும் வழிமுறைகள் - மனவெழுச்சி ஒருமைப்பாட்டையும் அனைத்து நாட்டுப் பொது நோக்கையும் வளர்த்தல்.

## பள்ளி ஆட்சிமுறை

**அலகு 4 : ஆட்சிமுறை**

1. கல்வியின் நோக்கங்கள் - கல்வியில் அரசின் கொள்கை.

2. பள்ளியிடம் - கட்டிடம் - வகுப்பறைப் பொருள்கள் - இருக்கை வசதிகள் - விளையாட்டிடம் - பள்ளிப் பொருட்காட்சி - பள்ளித்தோட்டம்.

3. (அ) தொடக்கநிலை, இடைநிலை, உயர்நிலைப்பள்ளிகளுக்கான கலைத்திட்டம் (Curriculum) அமைத்தலின் கோட்பாடுகள் - பள்ளிப்பாடத்திட்டம் பற்றிய அறிவு.

   (ஆ) பாட அலகினைத் திட்டமிடல் - ஒருநாள் பாடத்தைத் திட்டமிடல்.

(இ) பாட அட்டவணை அமைத்தலின் கோட்பாடுகள் – நன்மைகளும் குறைபாடுகளும்.

(ஈ) நூலகம் – வீட்டுவேலை – வெளிச்செலவு – பள்ளிப்பாடி வாழ்க்கை.

**அலகு 5 : கடமைகள்**

1. (அ) தலைமை ஆசிரியர் – கடமைகள்.

(ஆ) ஆசிரியர் – தன் முன்னேற்றத்திற்கான நிகழ்ச்சித்திட்டங்கள், பள்ளியில் வைக்கப்பெறும் பதிவேடுகள்.

(இ) ஆசிரியர் மன்றங்கள் – ஆசிரியர் குழுக் கூட்டங்கள்.

(ஈ) பெற்றோர் – ஆசிரியர் மன்றங்கள்.

2. (அ) நாள்தோறும் நடைபெறும் காலைக்கூட்டம் – நோக்கம் – மாணாக்கர் தன்னாட்சிமுறை – மாணவர் விடுதி – தங்கிப் படிக்கும் விடுதி இணைந்த பள்ளிகள் – சாரணர் இயக்கம் – இளைஞர் குழுச் செயல்கள் போன்ற கலைத்திட்டத்தோடு இணைந்த செயல்கள் பெறும் சிறப்பிடம்.

(ஆ) பள்ளி ஒழுங்கு – அதன் இயல்பு – பரிசும் தண்டனையும் – பள்ளி ஒழுங்கினை நிலைநிறுத்தும் வழிகள்.

3. தேர்வுகளும் மதிப்பீடும் – தேவை – தேர்வு வகை – தரப்படுத்தப்பெற்ற அடைவுச்சோதனைகள் – நல்ல சோதனையின் பண்புகள் – பிழைகள் ஆராய்தல் – பிழை நீக்கமுறைகள் – தேர்ச்சி மாணாக்கர் முன்னேற்றத்தினைக் குறித்து வைக்கும் பதிவேடுகள்.

4. தமிழ்நாடு கல்வி விதிகள் பற்றிய பொதுவான அறிவு – ஆசிரியர் தகுதி – விடுப்பு விதிகள் போன்றவை.

## பார்வைக்கான நூற்பட்டியல்


**கல்வி உளவியல்**

1. Basic Psychology - J.S. Ross
2. Groundwork of Educational Psychology - J.S.Ross
3. Elements of Educational Psychology - H.P.Bhalja
4. Educational Psychology - Jalota
5. கல்வி உளவியல் – கே. ஆர். அப்பளாச்சாரியார்,
6. கல்வி உளவியல் – எஸ். சந்தானம்
7. கல்வி உளவியலும் கல்விச் சமூகவியலும் – எஸ். சந்தானம்
8. கற்றலும் கற்பித்தலும் – கே.ஆர். அப்பளாச்சாரியார் – ஆர். ராமானுசாச்சாரியார்
9. குழந்தைகளின் இயல்பும் போதனாமுறையும் – ப.அருணசலட

**பள்ளி ஆட்சி முறை**

1. School Organisation - W.M.Ryburn
2. Secondary School Administration - S.K. Kochar
3. School Organisation - Paul Vargheese
4. The Organisation of Schools - W.M. Ryburn
5. பள்ளி நிருவாக அமைப்பு – எஸ். சந்தானம் & ஏ.எஸ். துரைசிங்
6. பள்ளி ஆட்சிமுறை – எஸ். வடிவேலு

## மாதிரி வினாத்தாள்

தாள்.1

### தமிழாசிரியப் பயிற்சிச் சான்றிதழ்த் தேர்வு
### தமிழ்மொழிக் கற்பிக்கும் முறை.

(நேரம் : 3 மணி) (மதிப்பெண்: 100)

குறிப்பு 1. முதற் பகுதியில் ஒரு வினாவுக்கும் இரண்டாம் பகுதியில் 2 வினாக்களுக்கும் விடை எழுதுக. ஒவ்வொரு வினாவுக்கும் மூன்று பக்கங்கட்குக் குறையாமல் விடை எழுதுக. ஒவ்வொரு விடைக்கும் 20 மதிப்பெண்.

குறிப்பு 2. மூன்றாம் பகுதியில் எட்டு வினாகட்கு விடை எழுதுக. ஒவ்வொரு வினாவுக்கும் ஓரிரு பத்திகளில் ஒரு பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுக. ஒவ்வொரு விடைக்கும் ஐந்து மதிப்பெண்.

### பகுதி - 1 — 1X20 = 20

1. கீழ்வரும் உரைநடைப் பகுதியை ஒன்பதாம் வகுப்புக்கு ஒரு பாட வேளையில் கற்பிக்கப்பாடக் குறிப்பு எழுதுக.

மேடைப் பேச்சிலே மெல்லிய பூங்காற்றுப் போன்ற இனிய நடையுண்டு. ஆற்றொழுக்குப் போன்ற அழகிய நடையுண்டு. கோடையிடி போன்ற ஓசை உண்டு. கொண்டலெனப்பான நடைகளுண்டு. இக்காலத்தில் சொற்பொழிவு என்ற சொற்றொடரைத் தமிழறிஞர்கள் வழங்குகிறார்கள். வானத்தினின்றும் பொழியும் மழைபோல மேடையினின்று பொழியும் சொல்மாரியைச் சொற்பொழிவு என்ற சொற்றொடர் உணர்த்தும். முப்பது ஆண்டுகளுக்கு முன்னே சொற்பொழிவு ஆற்றுப்படை என்ற நூலை இயற்றினார் தமிழறிஞர் ஒருவர். சொற்பொழிவுச் செய்யும் முறைகளை எடுத்துரைத்துப் பேச்சாளர்களுக்கு நெறி காட்டுவது அவ்வுரை நடை நூல். ஆயினும் சொற்பொழிவு என்னும் தொடர் புதுவதாயிருந்தமையால் அந்நூலை ஏளனம் செய்யத்தலைப்பட்டனர் பலர். சின்னாளில் இறந்துபட்டது அந்நூல். ஆனால் செற்பொழிவு என்பது வழக்காற்றில் வந்துவிட்டது.

2. கீழ்வரும் கம்ப இராமாயணச் செய்யுளை நயமுணர்த்தும் வகையில் நீர் பத்தாம் வகுப்பிற்குக் கூறுவனவற்றைத்தொகுத்துக்கூறுக.

எண்ணிலா வருந்தவத்தோன் இயம்பியசொல்
மருமத்தின் எறிவேல் பாய்ந்த
புண்ணிலாம் பெரும்புழையில் கனல் நுழைந்தால்
எனச்செவியில் புகுதலோடும்
உண்ணிலாவிய துயரம் பிடித்துந்த
ஆருயிர்நின்றூசலாடக்
கண்ணிலான் பெற்றிழந்தான் எனவுழந்தான்
கடுந்துயரம் காலவேலான்.

### பகுதி - 2 — 2X20 = 40

1. கல்வித் திட்டத்தில் தாய்மொழி பெறும் சிறப்பிடத்தை ஆராய்க.
2. செயல் திட்ட முறையினை விளக்கி, அது மொழிப்பாடம் கற்பிப்பதற்குப் பயன்படுமாற்றை விளக்குக.
3. பத்தாம் வகுப்பு உரைநடை நூலில் காணப்படும் உரை நடை பாட வகைகளைக் கூறி, அவற்றுள் இரண்டு வகைகளைக்கற்பிக்கும் முறையினை வரைக.
4. துணைப் பாடங் கற்பித்தலின் நோக்கங்கள் யாவை? ஒன்பதாம் வகுப்புத் துணைப்பாடங் கற்பிக்க ஒருபாட வேளைக்கு எவ்வாறு திட்டமிட்டு நடத்துவீர்?
5. தனிப்பட்ட இலக்கணப்பாடம் தேவையில்லை. கட்டுரையின் மூலமும் , பாடப்புத்தகத்தின் மூலமும் கற்பிப்பதே நல்ல முறை - இக்கூற்றை ஆய்க.

## பகுதி - 3

$8 \times 5 = 40$

1. படிக்கக்கற்பித்தலில் எழுத்துமுறையின் குறைகள் யாவை?
2. வாய்மொழிக்கட்டுரை எழுதும் கட்டுரைக்கும் முன்னிடம் பெறவேண்டுவது ஏன்?
3. விதிவரும் முறையால் இலக்கணங்கற்பித்தலால் விளையும் பயன்கள் யாவை?
4. ஆகுபெயர் என்பதனை விளக்கி இப்பாடத்தை ஒன்பதாம் வகுப்பிற்கு எவ்வாறு தொடங்குவீர் எனக்குறிக்க.
5. பிறிது மொழிதலணியை எடுத்துக்காட்டுகளுடன் கற்பிப்பதை வரைக.
6. தளைகள் எத்தனை? ஒவ்வொரு பாவுக்குமுரிய தளைகள் யாவை? இவற்றைக்கற்பித்தலில் மாணவரின் முன்னறிவைக்காண்பது யாங்ஙனம்?
7. திரு.வி.க.வின் தமிழ்த் தொண்டினைக்கூறுக.
8. மறைமலையடிகளின் நடைச் சிறப்பை எழுதுக.
9. உரைநடைக் கைவந்த வல்லாளர் என ஆறுமுக நாவலர் பாராட்டப்படுவானேன்?
10. தற்காலத்தில் தோன்றிய சிறந்த தமிழ்ப்புதினத்தைப் பற்றிக்குறிப்பு எழுதுக.
11. சிறுகதை எழுதுபவர்களில் எவரைச் சிறந்தவராகக் கருதுகிறீர் ? ஏன்?
12. பாரதிதாசன் பரம்பரையில் வந்த தற்காலத் தமிழ்க் கவிஞர் ஒருவரின் பாத்திறத்தினைக் கூறுக.

மாதிரி வினாத்தாள்

தாள் : 2

## தமிழாசிரியப் பயிற்சிச் சான்றிதழ்த்தேர்வு
## கல்வி உளவியலும் பள்ளி ஆட்சி முறையும்

(நேரம் : 3 மணி) (மதிப்பெண்: 100)

### குறிப்பு

1. பகுதி ஒன்றில் அ பிரிவிலிருந்து 2 கட்டுரை வினாக்களுக்கும் ஆ பிரிவிலிருந்து ஒரு கட்டுரை வினாவுக்கும் விடை எழுதுக.
2. பகுதி இரண்டில் அ பிரிவிலிருந்து 4 குறுவிடை வினாக்களுக்கும், ஆ பிரிவிலிருந்து 4 குறுவிடை வினாக்களுக்கும் விடை எழுதுக.
3. கட்டுரை வினாக்களுக்கு மூன்று பக்கங்கள் குறையாமலும் – குறுவிடை வினாக்களுக்கு ஓரிரு பத்திகளில் ஒரு பக்கத்திற்கு மிகாமலும் விடை எழுதுக.
4. கட்டுரை வினாக்களில் ஒரு விடைக்கு 20 மதிப்பெண். குறுவிடை வினாக்களில் ஒரு விடைக்கு 5 மதிப்பெண்.

### பகுதி - 1

**அ பிரிவு** 2X20 = 40

1. மரபுநிலை சூழ்நிலை என்பவற்றை விளக்குக. குழந்தைகளின் வளர்ச்சியையும் நடத்தையையும் அவை எவ்வாறு தாக்குகின்றன?
2. இளமைப் பருவத்தின் சிறப்பியல்புகள் யாவை? இளமைப்பருவ மாணவர்களின் தேவைகளை நிறைவுசெய்ய ஆசிரியர் எவ்வெவ் வாய்ப்புகளைப் பள்ளியில் நல்தல்கூடும்?
3. குழந்தையின் பொது நுண்ணறிவை எவ்வாறு அளக்க செய்யலாம்? நுண்ணறிவுச் சோதனைகளின் பயன்களை குறைகளையும் எழுதுக.
4. சமூகச் சிக்கலுக்கும், போராட்டங்களுக்கும் உரிய காரணங்கள் யாவை? அவைகளை நீக்க ஆசிரியர் என்ன செய்தல் கூடுதல்?

**ஆ பிரிவு** 1X20 = 20

5. சிறந்த தலைமை ஆசிரியரின் பண்புகள் யாவை? தலைமை ஆசிரியரின் பொறுப்புக்களையும், கடமைகளையும் குறிக்க.
6. ஆசிரியர் ஒவ்வொருநாளும், தம் பாடத்தைத் திட்டமிடவேண்டியது ஏன்? சிறப்புப்பாடக் குறிப்பின் நல்லியல்புகள் யாவை?
7. பள்ளித்தேர்வுகளால் ஏற்படும் நன்மைகளைக்குறிக்க தற்காலத்தேர்வுமுறை நம்பத்தகுந்ததாகவும் புறவயப்பட்டதாகவும் அமையயாது செய்தல் வேண்டும்?

### பகுதி -2

**அ பிரிவு** 4X5 = 20

1. கல்வி உளவியலால் ஆசிரியர் பெறும் பயன்களில் ஐந்தினைக் கூறுக.
2. பள்ளி மாணவரிடையே தோன்றும் அச்சத்தைப்போக்கக் கையாளும் வழிகளைக் குறிக்க.
3. ஆய்வுத்திறனில் பயன்படுத்தப்படும் நிலைகளை ஓர் எடுத்துக்காட்டுடன் விளக்குக.
4. கற்றலில் ஆயத்தவிதியில் நடைமுறைப்பயன் யாது?
5. மீத்திறக்குழந்தைகள் அல்லது பிற்பட்டக்குழந்தைகளின் கல்விக்கு அளிக்கவேண்டிய கவனம் குறித்து எழுதுக.
6. மனநலத்தை மாணவர் பேணுதற்குரிய வழிகளில் ஐந்தினைக்கூறுக.

**ஆ பிரிவு** 4X5 = 20

7. கல்வி பற்றி அரசின் கொள்கையில் அடங்கிய பள்ளிக் கல்வியின் முக்கிய நோக்கங்களைக்கூறுக.
8. ஒவ்வொரு வகுப்புக்குமுரிய பாட அட்டவணையின் பயன்களையும், குறைகளையும் ஆராய்க.
9. ஆசிரியர் – பெற்றோர் உறவை வளர்க்க எவையேனும் ஐந்து முறைகளைக்கூறுக.
10. பள்ளிப்பாடி வாழ்க்கை, வெளிச்செலவு ஆகியவற்றின் கல்விப்பயன்கள் யாவை?
11. மாணவர்க்குத்தண்டனை வழங்குங்கால் ஆசிரியர் நினைவிற் கொள்ளவேண்டிய இன்றியமையாக்குறிப்புகள் எவை?
12. விடுதி இணைந்தபள்ளிகளால் மாணவர் பெறும் பயன்களைக்குறிக்க.

தாள் : 3 [struck-through] கல்வியும் செய்தி மற்றும் தகவல் தொழில் நுட்பமும்

அலகு 1

**கல்வி நுட்பவியல்**

கல்வி நுட்பவியல் கோட்பாடுகள், பொருள், வரையறை, தேவையும் வாய்ப்பும் – கல்வி நுட்பவியல் கூறுகள் – கல்வியல் கணினி வன்பொருள் மென் பொருள்கள் – இந்தியாவில் செய்தி, தகவல் தொழில்நுட்பவியல் புரட்சி – கல்வியில் அதன் இன்றியமையாத் தேவைகள்.

**கணினி அணுகுமுறைகள்**

கணினி அமைப்பின் கூறுகள் : உள்ளீடு, செயலாக்கம், வெளியீடு – கணினி அமைப்பின் வளர்ச்சி : பகுப்பாய்வு, வடிவமைப்பு, நடைமுறைப்படுத்துதல், விளைவு அறிதல், முன்னேற்றம் ஆகியன – கல்வியிலும் வகுப்பறையிலும் கணினி அணுகுமுறைகளைப் பயன்படுத்துதல்.

அலகு 2

**கல்வி கற்பித்தலில் புதிய உத்திகளும் அணுகுமுறைகளும்**

தாமாகவே கற்கும் முறைகளும் பாடநூல்களும் – சுயமாக கற்பிக்கும் முறை (P.S.I) – திட்டமிடப்பட்ட கற்றல் – கொள்கைகள் – நேர்வழித்திட்டம், கிளைவழித்திட்டம், திட்டமிட்டுக் கற்பித்தல் பாடப்பொருள் தயாரித்தல் – பல்வேறு படிநிலைகள்.

**தகவல் தொடர்பும் மக்கள்திரள் ஊடகங்களும்**

கோட்பாடுகளும் தகவல் தொடர்பு வழிமுறைகளும் – தகவல் தொடர்பு வகைகள் – தகவல் தொடர்பில் உள்ள தடைகள் – மக்கள் திரள் ஊடகங்கள் – மரபுவழி, புதியவை – அச்சு முறைகள், வானொலி, தொலைக்காட்சி மற்றும் ஒளி ஒலிக்காட்சி (Video) – செயற்கைக்கோள் வழிக்கல்வி – கல்வி கற்பித்தலுக்கு ஏற்ற தொடர்புச் சாதனங்களைத் தேர்ந்தெடுத்தல் – கற்றல்.

அலகு 3

**கல்வியில் கணினியின் பயன்பாடு**

கணினியின் கூறுகள் – உள்ளீடு, மையச்செயலாக்கம் (CPU) – வெளியீடு – கல்வி கற்றலில் கணினியின் பயன்கள் – கல்வி மேலாண்மை, துணைக்கருவி வகுப்பறைக் கற்பித்தல் ஆகியனவற்றில் கணினியின் பயன்பாடு – பல்லூடக (Multi media) அணுகுமுறை – படப்பெருக்கியையும் (LCD Projecter) பவர் பாய்ண்ட் மென்பொருளையும் பயன்படுத்துதலில் உள்ள வசதிகள்

தகவல் மற்றும் தொலைத்தொடர்புத் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் – இணையம் – தொடக்கமும் வளர்ச்சியும் – உலகளாவிய வலைப் பின்னல் (World wide web) – கல்வியில் இணையத்தில் பொதுவான பயன்பாடுகள்.

அலகு 4

**இணையமும் கல்வியும்**

இணையச் சேவை நிறுவனம் (ISP) – இணையத்தில் நுழைதல் – இணையத்தள முகவரி இடங்காட்டி (URL) – இணைய உலாவி மென்பொருள் (Internet Explorer) – இணையத்தைத் தேடுதல் – இணையத்தளம் – இணைய உலவி – மின் அஞ்சல் – இணையவழிக் காட்சி கலந்துரையாடல் – கற்றல், கற்பித்தலில் இவற்றின் பங்கு – இணைய வழிக்கற்றல் – இணையப் பல்கலைக்கழகம்.

அலகு 5

**இடைநிலைக் கல்வியில் ஒருங்கிணைந்த கல்வி நுட்பவியல்**

தேவையும் இன்றியமையாமையும் – ஆசிரியர் பணியிடைப் பயிற்சியின் தேவை – நன்னெறிகளையும் கணினி விழுமியங்களையும் ஒருங்கிணைந்த கல்வி நுட்பவியலில் கடைப்பிடித்தல் – எதிர்காலப் போக்குகள்.

**செய்முறைப் பயிற்சி**

1. கல்வித் தொடர்பான இரண்டு இணையத் தளங்களை இனங்காணுதல் மதிப்பிடுதல்
2. மின் அஞ்சலில் கடிதங்களை உருவாக்குதலும் அனுப்புதலும்
3. மின்னூடகங்கள் வாயிலாகவும், ஏனைய வழிகளிலும் தகவல்களைப் பெறுதல்
4. பவர் பாய்ண்ட் முறையில் விளக்குவதற்குப் பாடம் ஒன்றை தயாரித்தல்

## PRACTICAL

1. Identifying any two or more educational web sites and reviewing
2. Composing and sending E-mails
3. Accessing information from off-line and on-line resources
4. Preparing power point presentations

## REFERENCE BOOKS


1. இரத்தினசபாபதி. பி., <u>மக்கள் தொடர்பும் மாண்புறு கல்வியும்</u>, ஜோதி புத்தக நிலையம், 9ஏ ...கமில்லன் காலனி, நங்கை நல்லூர், சென்னை – 61.

2. ~~ஆரோக்கியநாதன், எஸ்., தகவல் தொடர்பியல், மாணிக்கம் பதிப்பகம், பரணம், திருச்சிராப்பள்ளி.~~
   மேல் நிலை தகவல் தொடர்பியல் ஆசிரியர், கி. இராசா, பாவைப்பப்ளிகேஷன்ஸ் (NCBH), சென்னை.

3. சாந்தா அ.மோகன், வீ., <u>மக்கள் தொடர்பியல் அடிப்படைகள்</u>, மீடியா பப்ளிஷர்ஸ், மதுரை

4. Karpagakumarvel, R.(1997), **<u>Educational Applications of Video - Theory Research and Practice</u>**, Suri Publisher, Coimbatore

5. Karpagakumarvel, R. (1998), **<u>Reading in Educational Technology</u>**, Suri Publishers, Coimbatore.